


இ.சு.முரளிதரன்

# கம்பராமாயணத்தில் அறிவியல்









திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா
நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணத்தில் அறிவியல்

இ.சு.முரளிதரன்

ஜீவநதி வெளியீடு
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணத்தில் அறிவியல்
(கட்டுரைத்தொகுதி)

ஆசிரியர் : இ.சு.முரளிதரன்

முதற் பதிப்பு : ஜனவரி 2016

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம் : 56

அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

ஜீவநதி வெளியீடு - 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம்
கடவுள்
இறை
பரம்பொருள்
தேவன்
ஆண்டவன்
பெருமான்
முதல்வன்
சுவாமி

என்ற அனைத்து வார்த்தைகளுக்கும்
நானறிந்த
ஒரே அர்த்தமான
அம்மாவுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிமறிப்பு

"கம்பராமாயணத்தில் அறிவியல்" என்னும் இச்சிறுநூலை என் அம்மாவின் அந்தியேட்டி தினத்தில் நினைவு வெளியீடாக உறவுகளுக்குக் கையளிப்பதில் ஆறுதலடைகின்றேன். சமூக, வரலாற்று நாவல்களையும், பக்தி இலக்கியங்களையும், சிற்றிதழ்களையும் வாசிக்கும் வழக்கத்தினை இறுதிவரை கைக்கொண்டவராகவே என் தாயார் காணப்பட்டார். கரணவாய் தெற்கில் வசிப்போரின் "ஆட்பெயர்களுக்கும்" நாவல்களிலுள்ள கதாபாத்திரங்களுக்குமான தொடர்பின் பின்புலத்தினை அழகாக விபரிப்பார். நோயுறுவதற்கு சில நாட்கள் முன்பாக நிலாந்தனின் "ஓ யாழ்ப்பாணமே" நூலை வாசித்து அதிலுள்ளவை குறித்துச் சிலாகித்துப் பேசினார். தீவிர ஆன்மீக நாட்டத்தோடு ஆலயங்களில் ஆத்ம தேடலினை நிகழ்த்துவார். இயற்கை எய்துவதற்கு முன்னைய நாள் மரணவலியிலிருந்து மீட்சிபெறக் கந்தசஷ்டிக் கவசத்தினை ஓதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தனை துணைக்கு அழைத்தார். கம்பராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். எனவே தான் கம்பராமாயணங் குறித்த இச்சிறுநூலை என் தாயார் நினைவாக வெளியிடத் தீர்மானித்தேன்.

என் தாயார் இயற்கை எய்திய போது அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், இறுதி நிகழ்வில் உதவிக்கரம் நீட்டியோருக்கும் என் குடும்பத்தினரின் சார்பாக மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கட்டுரைகளை "ஜீவநதி" இதழிலே பிரசுரித்து உதவியதோடு, தொகுதியாக்கி சிறப்பாக பதிப்பித்துத் தந்த க.பரணீதரனுக்கு என் நன்றி உரித்தாகுக.

- இ.சு.முரளிதரன்

அத சைனம் நித்ய ஜாதம்
நித்யம் வாமன்யஸே ம்ருதம்
த்தாபித்துவம் மஹா பாஹோ
நைனம் சோசி துமர் ஹஸி

- பகவத்கீதை

(ஆத்மா பிறக்கும் என்றும் பின்னர் இறக்கும் என்றும் நீ அறிந்துள்ளதால் அதன் பொருட்டு வருந்துவது அர்த்த மற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்

1. கம்பராமாயணத்தில் அறிவியல்
2. கம்பனும் வண்ணத்துப்பூச்சி விளைவும்
3. கம்பனும் ஒரு கலகக்காரன்
4. மந்தரையும் கருத்தியல் மறு அமைப்பாக்கமும்
5. கம்பனின் சொற்கட்டுமானம் பாலகாண்டத்தை முன் வைத்து
6. கிட்கிந்தா காண்டத்தில் தவளை
7. சுந்தரகாண்டத்தில் மீ
8. விந்தை மொழி வங்கியில் விழி
9. கம்பனை நகலெடுத்த திரையிசைப் பாடலாசிரியர்கள்
10. வில்லனும் வில்லியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணத்தில் அறிவியல்



பழந்தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள சில கருத்துக்களை நுணுகி நோக்கும் போது நவீன சிந்தனையாளர்களின் அறிவியற் கோட்பாடுகளோடு சற்றே நெருங்கி வருவதை உணர்ந்து கொள்ளலாம். அந்தவகையில் கம்பராமாயணத்திலும் மீப்புலமை சுவறிய பதிவுகள் சில அறிவியலின் அலைவரிசையோடு பொருந்திப் போகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவுபடாத நுண்துணிக்கையென அறிவியலால் சுட்டப்பட்ட அணுவானது பிற்காலத்தில் இலத்திரன், புரோத்திரன், நியூத்திரன் எனப்பாகுபடுத்தப்பட்டது. தொடர்ந்து மீசன், பேரியன் என்னும் நுண்துகள்களின் இருப்பும் இனங்காணப்பட்டது. தீவிர ஆய்வுத் தேடலின் விளைவாக "குவாக்" என்னும் துகளும் புதைந்திருப்பது தெரியவந்தது. இந்நிலையில் குவாக்குகளின் கூட்டுத்திணிவோடு புரோத்தனின் திணிவு முரண்பட நவீன அறிவியல் திணறிப் போனது. கண்டறியப்பட வேண்டிய துணிக்கை ஒன்றினைத் தேடி அணுப் பௌதீகவியல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியினை முன் னெடுத்தனர். ஈற்றிலே கடவுளின் துணிக்கையை (Higgs Bosson) கண்டடைந் தனர். அணுப்பௌதீகவியல் விஞ்ஞானிகளே அதிசயிக்கும் வகை யிலான புனைவொன்றினை கம்பராமாயணத்திலே தரிசிக்க முடி கிறது. இரணிய வதைப்படலத்திலே கடவுளின் துணிக்கையை நெருங்கும் துகள் ஒன்றினை கம்பன் இனங் காட்டுகின்றான்.

"சாணிலும் உளன் ஓர் தன்மை
அணுவைச் சதக் கூறிட்ட
கோணிலும் உளன்"

என்று இறைவனின் இருப்பினைப் பிரகலாதன் விளக்குவதாகக் கம்பன் குறிப்பிடுகின்றான். அணுவை நூறு கூறுகளாக்கி அவற்றின் ஒரு பகுதிக்கு "கோண்" என்ற பெயரை வழங்கி கடவுளின் துணிக்கையை நெருங்கும் வசீகரமான புனை வொன்றைக் கம்பன் படைத்தளித்துள்ளான்.

ஆரம்ப காலத்தில் உலகம் தட்டையானதென்றே உறுதி யாகக் கருதப்பட்டது. எனினும் பைதகரஸ், அரிஸ்டோட்டில், ஹிப்போக் கிரட்டிஸ் போன்ற மேதைகள் கோள வடிவமொன்று நம்பினர்/ பதினைந்தாம் நூற்றாண்டிலே தோன்றிய "கொப்பனிக்கஸ்" நட்சத்திரங்கள் தென்படுவதில் நாடுகளுக் கிடையிலான வேறுபாட்டினையும், பாய்மரக் கப்பலின் உச்சியி லுள்ள விளக்கு கடலின் தொலைவில் தாழ்ந்து செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தையும் சான்று காட்டி புவிகோள வடிவமென்பதை விளக்கினார். பதினாறாம் நூற்றாண்டில் "மகலன்" என்ற கடலோடி கப்பலிலே உலககைச் சுற்றிவந்து புவியுருண்டையென நிருபித்தார். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண் டிலேயே கம்பன், "திசை முகன் செய்த முட்டை கீண்டிலது" "விரிஞ்சன் எனவோர் முட்டை தந்தனில்" என உலகை முட்டை வடிவிலே கற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித மனத்தின் ஆழ்புலத்தில் நிறைவேறாத வேட்கைகள் உறைந்து கிடக்கின்றன. உறக்கத்தில் - மூளையின் மெது இயக்கத் தில் - புறத்தூண்டலற்ற தருணத்தில் ஆழ்மன வேட்கைகள் வீரியங் கொண்டு கனவுகளாக வெளிப்படுகின்றன. "மன அழுத்தத்தோடு உறங்குவோருக்கு கனவிலே விபரீதமான தோற்றங்கள் தென்படலாம்" என்று உளவியல் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

"உண்டாகிய கேடுடையார் துயிலா
எண் தானும் இயைந்து இயையா உருவம்
கண்டாரெனலாம்"

என்று கம்பனும் உளவியலாளரின் கருத்தினை வெளிப்படுத்தி யுள்ளமை ஆச்சரியகரமானது.

மாரீசன் மாயமானாக வடிவமெடுத்து வனத்திலிருந்த சீதை முன் தோன்றுகிறான். பொன்மானைக் கண்ணுற்ற சீதை, இராமனும் இலக்குவனும் அமர்ந்திருந்த இடந்தேடிச் சென்று மானின் அங்க அடையாளங்களை விபரிக்கிறாள். "இத்தகைய உறுப்பமைவுகளோடு உலகிலே ஒரு உயிரினம் இருக்க வாய்ப் பில்லை" என இலக்குவன் கருத்துரைக்கின்றான். அதற்கு இராம பிரான் கூறும் பதிலில் கம்பனின் புலமை வியப்பளிக்கின்றது.

"நில்லாவுலகின் நிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர் மன்னுயிர் தாம்
பல்லாயிரங்கேடி பரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமரா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எதிர்வினையில், "ஒழுங்கான அறிவினால் எவ்வளவு வல்லமை பொருந்தியவர்களும் உலகினை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. உலகிலே பல்லாயிரங் கோடி உயிரிகள் பரந்துள்ளன. எனவே இத்தகைய அங்க அடையாளங்களோடு ஒரு உயிரினம் இருக்கவே முடியாதென எவ்வாறு மறுக்கலாம்" என்று இராமபிரான் விடையளிக்கிறார். கம்பனின் உலக ஞானம் கனதி யானது என்பதற்கு இச்செய்யுளும் சான்று பகர்கிறது.

முழுநிலா தினங்களில் பூமியை நெருங்கும் சந்திரனின் இயல்பால் ஈர்ப்பு சக்தியில் மாற்றம் நிகழ கடல் அலைகள் ஆர்ப்பரிக்கும் நிகழ்வினை,

"திங்கள் உதயத்தில் கலித்தோங்கும் அலையாழி" என்று கம்பன் பதிவு செய்துள்ளான்.


கம்ப காவியத்தில் புட்பக விமானம் குறித்த புனைவும் அறிவியலோடு பொருத்திப் போகும் வகையிலேயே அமைந் துள்ளதும் குறிப்பிடத்தக்கது. கம்பநாடன் புட்பக விமானம் ஓடுபாதையில் வேகமாகச் சென்று மேலெழுந்ததகவல் ஒன்றினை அழகாகப் பதிவு செய்துள்ளான்.

"மண்ணின் மேலவன் தேர் சென்ற
சுவடெலாம் மாய்ந்து
விண்ணில் ஓங்கியது ஒருநிலை"

என அச்செய்தி உணர்த்தப்படுகின்றது. சீதையைத் தேடிச் செல்லும் இராமனும் இலக்குவனும் விமானத்தின் சக்கர அடை யாளங்களை சிறிது தூரம் காண்கின்றனர். பின்னர் வானிலே எழுந்ததற்கான சான்றே தென்படுகின்றது. ஓடுதளத்தில் வேகமாகப் பயணித்து, வானிலே எழுகின்ற விமானங்குறித்த சிந்தனையும் கம்பனின் ஆளுமையை நன்கு தெளிவு படுத்தியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனும் வண்ணத்துப்பூச்சி விளைவும்



ஒழுங்கின்மைக் கோட்பாட்டின் (Chaos Theory) உட்பிரிவாகவே வண்ணத்துப்பூச்சி விளைவு (Butterfly Effect) என்னும் அறிவியல் தத்துவம் அமைகின்றது. எளிய தொடக்கத்தின் நீட்சியான நிகழ்வுகள் நாம் எதிர்பாராத விஸ்வரூப விளைவுகளை ஏற்படுத்தி விடலாம் என்னும் நுட்பமான மெய்ம்மையை இக்கோட்பாடு வெளிக்கொணர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலானது ஒழுங்கு குலைந்தவற்றை ஒழுங்காக்கி நேரியல் தொடர்பின் (Linear Relativity) அடிப்படையில் அனைத்தையும் விளக்க எத்தனிக்கிறது. ஆனாலும் பெரும் பாலான சம்பவங்களுக்கும் விளைவுகளுக்குமிடையே நேர் மாறியல் தொடர்பினையே (Non Linear Relativity) உணர்ந்து கொள்கிறோம்.

*1969* இல் Edward Loren என்ற வானிலை நிபுணர் பருவ மாற்றங்களில் "ஒழுங்கான ஒழுங்கற்ற தன்மையை" கண்டறிந்து வெளிப்படுத்தினார். 'Does the Flap a butterfly's wing in Brazil set off a torando in texas?" என ஆங்கில இலக்கியங்களில் கையாளப்படும் Rhetorial Question ஊடாக வினாவினார். பிறேசிலில் ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பு டெக்ஸாசில் புயலை உருவாக்குமா? என்று எட்வேர்ட் லோரன்ஸ் எழுப்பிய வினாவே வண்ணத்துப் பூச்சி விளைவைக் கட்டமைத்தது.

சோழர் காலத்தில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தியான கம்ப நாடனிடம் வண்ணத்துப்பூச்சி விளைவுக்கான திறவுகோலைத் தரிசிக்க முடியும் என்று கூறினால் நம்புவதற்குச் சற்றுக் கடின மாகவே இருக்கும். ஆனால் நுணுகி ஆராய்ந்தால் அதிசயிக் கத்தக்க உண்மையொன்று புலப்படும். கம்ப காவியத்தில் இடம்பெறும் காட்சியொன்று அலாதியான கற்பனையோடு வண்ணத்துப்பூச்சி விளைவின் உள்ளீட்டை வெளிப்படுத்தி ஆச்சரியந் தருகின்றது. தசரதச் சக்கரவர்த்தி நிலைக் கண்ணாடி ஒன்றின் முன்னே நின்று உருவொளியில் தன்னைத் தரிசிக்கிறான். அத்தருணம் காதோரம் நரை மயிரொன்று கண்ணுக்குப் புலனா கின்றது. இக்காட்சியினையும், நரைமயிரின் தோற்றம் நிகழ்த்தப் போகும் அபத்தமான இறுதி நிகழ்வையும் தற்புதுமையாகக் கம்பர் பதிவு செய்துள்ளார். சிறு நிகழ்வின் நீட்சியாக நகரும் சம்பவக் கோவைகளின் விளக்கத்தை வான்மீகி இராமாயணத்திலே இனங்காண முடியாதென்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீங்கிழை இராவணன் செய்த தீமைகள்
ஆங்கொரு நரையதாய் அணுகிற்றாமெனப்
பாங்கில் வந்திடு நரை படிமக்கண்ணாடி
ஆங்கதில் கண்டனன் அவனி காவலன்"

இராவணன் செய்த தீமைகளின் வெளிப்பாடாக தசரதனின் ஒற்றை நரைமுடி கண்ணாடியில் புலப்படுவதனை நுட்பமாக நோக்கின் வண்ணத்துப்பூச்சி விளைவின் உள்ளீட்டைப் புரிந்து கொள்ளலாம். தசரதனுக்கு ஒரு நரைமுடி தோன்றுவதால் இலங்காபுரியில் யுத்தம் நிகழ்ந்து இராவணன் மரணமடைவான் என்று கம்பர் கூறுகின்றார்.

தசரதனிடம் தோன்றிய நரையே இராமனுக்கான பட்டாபிஷேகத்தை முன்மொழியச் செய்கின்றது. கூனியின் உள்ளத்திலே முடிசூட்டுவிழா ஒவ்வாமையினை உண்டாக்க, கைகேயியை மூளைச் சலவை செய்து, இராமனைக் காட்டுக்கு அனுப்பத் துணையாகிறாள். வனவாசத்தில் சூர்ப்பனகையின் அங்கங்கள் சிதைக்கப்படுகின்றன. இராவணனால் சீதை சிறை எடுக்கப்பட, ஈற்றிலே யுத்தம் நிகழ்ந்து இராவணன் கொல்லப்படு கிறான். எனவே தசரதனின் ஒற்றை நரை என்ற எளிய தொடக்கமே இலங்காபுரியில் விஸ்வரூப விளைவுகளை ஏற்படுத்தி விடுவது தெளிவாகின்றது.

மனித நிகழ்வுகளின் நீட்சியில் ஒரு நிகழ்வால் மட்டுமே மறு நிகழ்வு தீர்மானிக்கப்படும் நிச்சயத் தன்மை சாத்தியமில்லை.

எனவே தனியொருவனின் இயக்க மாறுதலை ஒழுங் கின்மைக் கோட்பாட்டால் கடக்க முயல்வது புனைவின் வசீகரத்திற்கு பொருந்துமே தவிர, அறிவியலுக்கான அழுத்தமான விளக்கமாக அமைந்து விடாது. நவீன காலத்தில் Butter fly effect, Le Battement d'ailes du pupillon, The Bealing of a Butterfly's wing போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுமொழிப் படங்களும் தசாவதாரம் (கமல்ஹாசன்) என்ற தமிழ்த்திரைப் படமும் வண்ணத்துப்பூச்சி விளைவை மாறுபட்ட புரிதலோடு அணுகியுள்ளன. புனைவு வெளியின் அடிப்படையில் நோக்கினால் வண்ணத்துப்பூச்சி விளைவைப் பதிவு செய்ததிலும் பன்னிரெண்டாம் நூற்றாண்டு மேதாவியான கம்பன் கொண்டாட்டத்திற்குரியவனாகவே கருதப்பட வேண்டியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனும் ஒரு கலகக்காரன்



"ஒரு படைப்பு அல்லது சம்பவத்தை அதன் வரலாற்றுப் பகைப்புலத்திலிருந்து பெயர்த்தெடுத்து பிறிதொரு காலத்து நிகழ்வுகளோடு ஒட்டுவது anachronism(கால வழு) எனப்படும்" என்று கவிஞர் சோ. பத்மநாதன் என்னுடைய "நளதமயந்தி" நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் சுட்டிக் காட்டியுள்ளார். நளவெண்பாவை வசன கவிதையில் எழுதிய போது கால உடைப்பினையும் ஆங்காங்கே நுழைத்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான மெல்லிய விமர் சனத்தையே எனது ஆசான் அணிந் துரையில் வெளிப்படுத்தியிருந்தார். கால உடைப்பு பின்நவீனத் துவக் கூறுகளில் ஒன்றாக அமைகின்றது. மரபு மீறா படைப்பாளி களுக்கு இத்தகைய முரண் தருணங்கள் நெருடலையே ஏற்படுத்து கின்றன. நவீன படைப்புகள் பலவற்றிலே கால உடைப்புக் கலகங்களைத் தரிசிக்க முடிகிறது. இத்தகைய கலகக்காரர் களுக்கு முன்னோடியாகக் கம்ப நாடன் திகழ்வது வியப்பினைத் தருகிறது.

சரயுநதியின் பண்பினை எழில் ததும்புமாறு கம்பர் வெளிப்படுத்துகிறார். ஆற்றுப்பெருக்கினை உவமிக்கும் தருணத்தில் காலமீறலை இனங்காணலாம். சரயு நதியானது தயிர், பால், வெண்ணெய் என்பவற்றை உறியோடு வாரிக் கொண்டு, மருதமரங்களை வீழ்த்தி ஆயர்குலப்பெண்களின் ஆடை கவர்ந்து செல்லும் தன்மையானது காளிங்கனின் மீது நடனமாடும் கண்ணபிரானின் செயற்பாட்டை ஒத்திருப்பதாகக் குறிப்பிடு கின்றார்.

தண்ட காரணியத்திலே விராதன் என்ற அரக்கன் சீதையைத் தூக்கிச் செல்கிறான். இராம பிரான், அவன் மீது பாணந்தொடுத்துக் காயப்படுத்துகிறார். சாகா வரம் பெற்ற அவ்வரக்கனின் வலிமையை அகற்ற அவனது கரங்களை வெட்டி விடத் தீர்மானிக்கிறார். இராமனும் இலக்குவனும் விராதனின் தோள்களில் ஏற, அவனோ கரகம் போலச் சுழன்று வானிலே பறக்கின்றான்.

“சுவண வண்ணனொடு கண்ணன்
மிசை கொள்ள விவை தோய்
அவண விண்ணிடை நிமிர்ந்து
படர்கின்றவன் அறஞ்
சிவண தன்ன சிறை மன்னவரோடு
ஏகு செல்வத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவண வண்ணனெனும் மன்னவ
னையும் ஒத்தனன் அரோ"

என்று அக்காட்சியினை கம்பர் மனக்கண்ணிலே கொண்டு வந்து நிறுத்துகிறார். பொன்னிறத்தையுடைய இலக்குவனோடு. இராமபிரான் விராதனுடைய தோளிலே ஏறி ஆகாயத்தில் எழுவதற்கு கம்பர் கால மீறலைப் பின்புலமாகக் கொண்ட உவமையினை எடுத்துரைத்துள்ளார். கருடனின் சிறகிலே பலராமனும் கிருஷ்ணனும் அமர்ந்து செல்வதைப் போல அக்காட்சி இருப்பதாக வருணிக்கின்றார்.


இராம அவதாரத்தின் பின்னரே கிருஷ்ணாவதாரம் நிகழ்வதால், இராமாயணத்திலே கிருஷ்ணன் குறித்த உவமை காலக் கட்டுமானத்திற்கு பொருந்தாமல் காலத்தை குலைத்துப் போடுவதாகவே அமைந்து விடுகின்றது. புதுமையில் அகலித்த சாத்தியப்பாடுகளை அவாவி நிற்கும் பிதாமகனான கம்பனுக்கு கால உடைப்புக்கலகமும் கனதியானதோர் அடையாளத்தையே வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தரையும் கருத்தியல் மறு அமைப்பாக்கமும்



ஆளுமைமிகு தனிநபர் ஒருவரை அறிவு முடக்கத்திற்கு உள்ளாக்கி, அவரது கருத்தியலை மறு அமைப்பாக்கம் செய்வதென்பது சாதாரண விடயமன்று. கம்ப காவியத்தில் இடம்பெறும் மந்தரை (கூனி) என்ற கதாபாத்திரம் மூளைச் சலவை செய்யும் ஆற்றல் பொருந்தியதாகக் கம்பநாடனால் சித்திரிக்கப்படுகின்றது. கைகேயியின் அறிவுப் புலத்தில் உறைந்திருந்த நம்பிக்கையினை அத்திபாரத்தோடு அகற்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண் கட்டுமானம் ஒன்றினை நிறுவும் மந்தரையை மிகவும் நுட்பமான முறையிலே கம்பன் காட்சிப்படுத்தியுள்ளான். இராமன் மீது மந்தரை கோபம் கொள்வதற்கான முகாந்திரத்தை வான்மீகி குறிப்பிடாத நிலையில் ஆழ்வார்களின் செல்நெறியில் கம்பன் குறிப்பிடுவதும் மண்ணுருண்டையால் முதுகில் அடித்தமை விதந்துரைக்கப்பட வேண்டிய விடயமாகும்.

கைகேயியின் கருத்தியலை மறு அமைப்பாக்கம் செய்வதற்கு மந்தரை பயன்படுத்தும் வார்த்தைகளின் வீரியம் "கட்டுரை சொல்லல் மேயினாள்" என்ற தொடரால் உணர்த்தப் படுகின்றது. கைகேயியின் மனதை மாற்ற உறக்க அசதி நிறைந்த தருணம் ஒன்றினைத் தேர்ந்தெடுத்தல், தனிப்பட்ட விரோத மனப்பாங்கு வெளித்தெரியாமல் மதியுரைகளை முன்னெடுத்தல், தசரதன் எவ்வகையான எதிர்வினைக் கருத்தாடலை நிகழ்த்தி னாலும் அக்கருத்துக்கள் நமத்துப்போகும் வகையில் தனது கருத்துக்களை முன்னரே ஆழப் பதித்தல், தசரதன் கூறப்போகும் விடயங்களை உய்த்தறிந்து அவை யாவும் அற்பமாகத் தோன்றும் வகையான மனநிலையை கைகேயியிடம் கட்டி எழுப்புதல் போன்ற பன்முக நுட்பங்களை அறிந்த ஆளுமையோடு மந்தரை என்ற கதாபாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மூளைச்சலவைக்குள்ளான கைகேயி, தசரதனிடம் வரம் கேட்கும் போது "முறையாலே தானே நல்கும் உன் மகனுக்கும் தரை" என்று ஏற்புடைய பதிலைத் தசரதன் கூறுகின்றான். அதைக்கேட்டுக் கைகேயி நெகிழ்ந்து வரம் பெறும் முயற்சியை முழுமையாகவே கைவிட்டிருக்கவேண்டும். ஆனால் தசரதனின் வார்த்தைகளைக் கைகேயி கருத்திலேயே கொள்ளவில்லை. இச்சந்தர்ப்பத்தில், மந்தரையின் மறு கட்டமைப்பின் வீரியத்தினை உணரமுடியும். இவ்வாறானதோர் மறுமொழியை தசரதன் கூறுவான் என்பதை எதிர்பார்த்து, அந்நியாயத்தை ஏற்காத வகையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொடுத்த பேரரசு அவன் குலக்
கோ மைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்குமாம்
பிறர்க்கு ஆகுமோ"

என்று முன்னேற்பாடாகத் திடமான கருத்தொன்றை கைகேயி யிடம் ஆழமாக ஊன்றி விடுகின்றாள். இத்தருணத்தில் மூளைச் சலவையாளிக்கான முழுமையான நிபுணத்துவத்தை மந்தரை யிடம் தரிசிக்க முடிகின்றது.

கைகேயி மூளைச்சலவைக்குள்ளான பின் "இராமன்" என்ற பதத்தை எடுத்தாளவே இல்லை! வரத்தினை யாசிக்கும் போது "சீதை கேள்வன் ஒன்றால் போய் வனம் ஆள்வது" என்றே சுட்டுகின்றாள். ஆரம்பகாலந் தொட்டு "இராமனைப் பயத்த எற்கு இடருண்டோ?" என்னும் உளநிலையோடு கைகேயி காணப்பட்டதை உணர்ந்த மந்தரை, இராமன் மீது நேரடியான காழ்ப்புணர்வைக் கட்டியெழுப்புதல் வெற்றியளிக்காதென்பதை அறிந்து மாற்றுத்திட்டமொன்றினை முன்னெடுகிறாள்.

சீதையை முன்னிலைப்படுத்தி இராமன் மீது மறைமுக வெறுப்பினை உருவாக்கி விடுகின்றாள்.

"சிவந்த வாய் சீதையும் கரிய செம்மலும்
நிவந்த ஆசனத்திலிருப்ப நின் மகன்
அவந்தனாய் வெறு நிலத்தில் இருக்க..."

என்று சீதை மீது வெறுப்புணர்வு ஏற்படும் வகையிலும், பரதன் மீது பரிதாப உணர்வு தோன்றும் வகையிலும் கைகேயியிடம் உரையாடுவது நோக்கத்தக்கது. மேலும் "ஜனகன்" மீது விரோதம் கொள்ளும் வகையிலும் கைகேயியிடம் மனக்குலைவினை நிகழ்த்தி விடுகின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"சீதை தந்தை உன் தாதையைத் தெறுகிலன்; இராமன்*
*மாதுலன் அவன், உந்தைக்கு வாழ்வினி உண்டோ?"*

என்று ஜனகன் மீது வெறுப்பினையும், கேகயன் மீது அனுதாபத்தையும் ஒன்றாகக் கட்டியெழுப்பிக் கைகேயியைத் திணறடித்து விடுகின்றாள். இதனாலேயே தான் "வண்மைக் கேகயன் மானே" என்று தசரதன் புகழ்ந்த போதும் கைகேயி மனங் குளிராது உள்ளந்தடுமாறாது பிடிவாதத்தோடு காணப்படு கின்றாள். கைகேயி சூழ்வினைப்படலத்தில் கைகேயியின் மனம் - வாக்கு காயம் என்னும் மூவகை வெளிப்பாட்டிலும் மந்தரையின் மூளைச்சலவையைத் தரிசிக்க முடிகிறது. நுண் புலமையோடு கருத்தியல் மறு அமைப்பாக்கம் நிகழ்த்தும் பாத்திரமொன்றை அற்புதமாகப் படைத்த கம்பநாடனின் மேதமை போற்றற்குரியதே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனின் சொற்கட்டுமானம் பாலகாண்டத்தை முன்வைத்து



கம்பனின் சொல்வங்கியானது சோழர் கால சமூக அரசியல் பண்பாட்டுச்சூழலையும் முன்னைய குழுமங்கள் கையளித்த அறிவுப் புலத்தையும் தனிமனித ஆளுமைத்திறனையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப் பட்டதாகும். உரையாசிரியர்களின் நெறிப் படுத்தல் இல்லாது போயிருப்பின் வெகுமக்கள் தளத்தில் கம்பன் கையாண்ட சொற்களுக்கான பெறுமானம் வேறுவகையில் அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிர வாசகர்களின் அனுபவ வெளியும் ஒற்றைப் பரிமாணத்தினை தகர்த்துப் பயணித்திருக்கும். உரையாசிரியர்களிடையே முகிழ்ந்த முரண்வாசிப்புகளே வாசகனுக்கு பல்பரிமாண அனுபவத்தினை சாத்தியமாக்க முயன்றன என்பதையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கம்பகாவியத்தை எமது வாசிப்புக்கு உட்படுத்தும் தருணத்தில், உரையாசிரியர்களின் முற்கற்பிதத்திற்கும், நடப்பியற் சூழலுக்கும், தனிமனித ஆளுமைக்கும் அமைவாகவே புரிந்து கொள்ள எத்தனிக்கின்றோம். இத்தகைய புரிதல் ஏனைய படைப்புக்களுக்கும் பொருந்தியமையும் - தமிழிலக்கிய பரப்பிலே நயாதீதம் மிகுந்த சொற்கட்டுமானத்தையுடைய மேதா வளியில் கம்பனே முதன்மையிடத்தினை வகிக்கின்றான். இந்த வகையில் ஆறுகாண்ட அவியலில் பாலகாண்டத்தினைப் பதச்சோறாக நோக்க முனைகின்றேன்.

பால காண்டத்தில் காவியத்தின் அர்த்தச்செறிவினை உச்சப்படுத்தும் வகையிலே புதியசொற் சேர்மானங்களை செதுக்கி மொழியை வளம்படுத்தியமையினையும், அதனூடாக கவித்துவத்தினை வேறோர் தளத்திற்கு நகர்த்தியமையினையும் அவதானிக்க முடிகின்றது. குருதிப்புனல், தொண்மை, தீத்திரள், போகம்கனி, மேதேகு, சந்தனப்பந்தி போன்ற எண்ணற்ற சொற்கட்டுமானங்களைக்காண முடிகின்றது. இராவணனின் விம்பத்தை "திருவிலி" என்ற பதக்கூட்டிலும், சிவனது விம்பத்தை "ஈறிலான்" என்ற பதக்கூட்டிலும் கட்டிறுக்கமாக வெளிக் கொணர்ந்த கம்பனின் ஆளுமை வியப்பிற்குரியதே! மேலும் குருதிப்புனல், மேதகு என்பன நவீன தமிழில் புத்தம் புதிய சொற்கள் போல புத்துணர்வோடு புழக்கத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எதிர்ப்பெறுமானப் பதப்புணர்வுகளின் ஊடாக முரண் எழில் ததும்பும் சொற்சேர்க்கையினை நிகழ்த்துவதிலும் கம்பன் அலாதிப்பிரியம் கொண்டவனாகவே காணப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருஞாயிறு, அஞ்சனஒளி, இருட்பிழம்பு, போன்றன தகுந்த எடுத்துக்காட்டுக்களாகும். மகளிரின் விழிகளை "நதியிலும் குளத்திலும் பூவா நளினங்கள்" என்று வண்டுகள் நினைப்பதாகக் குறிப்பிடும் போதும், மிதிலை நகர ஆடவரை "நெருப்பறா அனங்கன் அன்னார்" எனச் சிறப்பிக்கும் போதும் கம்பனின் சொல்லாட்சி தனித்துவம் பெற்று விடுகின்றது.

கவித்துவத்தினைப் பலவீனப்படுத்தாது, நுகர்ச்சி யாளனின் தேடலை அதிகப்படுத்தி சடுதியான பரவசநிலையினை கட்டியெழுப்பும், வல்லமையோடு அணிகளைப் பயன் படுத்துவது கம்பனுக்கு கைவந்த கலையாகும். புதுமையான உவமைகளின் பதிவிலும் கம்பனின் மொழியாற்றலை உணரமுடி கின்றது. "சுதைக்கண் நுரையைப்பொருபு தூசு" "நீறணிந்த கடவுள் நிறத்தவான்" என்றவாறாக உவமைகளை வெளிப்படுத்துகிறான். மேலும் பிறைச்சந்திரனை "வகிர்மதி" என்றும் "குழவித்திங்கள்" என்றும் சுட்டுவது புதமையாகவே உள்ளன.

"கவிச்சக்கரவர்த்தி" நாடகத்திலே அழகிரிசாமி குறிப்பிடும் வகையிலான அர்த்தத்தினை தகர்த்தும் "துமி" என்ற பதத்தின் இயங்குதளம் காணப்படுகின்றது. "தானவரைத் தலை துமித்து" என்ற தொடரில் "துண்டாடி" என்ற பொருளினைத் தந்து நிற்கின்றது. கம்பன் பயன்படுத்தும் "மகளிர்கள்" என்ற பன்மைப்பதம் தற்போது "மகளிர்" என்றே கையாளப்படுகிறது. நொடிப்பொழுதில் அழித்தல் என்பதற்குப் பிரதிபதமாக "நுங்குவர்" என்பதைக் கம்பன் பயன்படுத்துகிறான். மேலும் பாலகாண்டத்தில் இடம்பெறும் அருப்பு, இருப்பு, தோட்டார் என்பன தமிழின் மென்மை புகுத்தும் பண்பால், தற்காலத்தில் அரும்பு, இரும்பு, தோண்டினார் என மாற்றம் பெற்றுள்ளன.

சுண்டக்காய்ச்சிய இறுகிய மொழியினைக் கையாண்டு நுட்பமான அர்த்தத்தினை வெளிப்படுத்தும் கம்பனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலையும் பல தருணங்களில் தரிசிக்க முடிகின்றது. விசுவாமித்திர முனிவரிடம் இராமனை ஒப்படைக்கும் போது "தந்தை நீ தனி தாயும் நீ" என்று தசரதன் கூறுகிறான். இராமனுக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூவருமே அன்னையராய் விளங்கியதால் "தனி" என்ற சொல்லை நுட்பமாகப் புகுத்திவிடுகின்றான். வாட்போரிலே சிறந்தவனை சுட்டுவதற்கு "வாளுடையுழவன்" என்ற தொடரை கண்டறிதலும் இராமன் நாணேற்றிய வேகத்தை வாசகனிம் தொற்ற வைக்க "எழுந்தது கண்டனர் இற்றது கேட்டார்" என இயம்புதலும் கம்பனின் சொற்கட்டுமானச் சிறப்பினை நன்கு வெளிப்படுத்து கின்றன.

"நெடு முதுகாற்றும் நெய்தல்", "பொரிபரல் படர்நிலம்", "காமவிதைக்கு எரு" என்பன நவீன கவிதைகளின் மொழி யாட்சிக்கு நிகரான தன்மையோடு அமைகின்றன. கம்பனின் முடிச்சியத்தை மொழி விசாரணைக்குரிய கனதியோடு அவிழாளிகள் அணுகினால் அவரவர் அனுபவ நுகர்ச்சிக்கு ஏற்ப, புதிய தெறிப்புகளை இனங்காண முடியும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்கிந்தா காண்டத்தில் தவளை



வாலற்ற ஈருடகவாழியான தவளை அறிவியல் வகைப்பாட்டில் அனுரா(Anura) என்றழைக்கப்படும் வகுப்பினைச் சேர்ந்ததாகும். ஆர்டிக், அண்டாட்டிக் துருவப் பகுதிகள் தவிர்ந்து, உலகெங்கும் ஐயாயிரத்திற்கும் அதிக மான பன்முக இனங்களாக வாழும் தவளைகளை, பாடும் உயிரியாக இலக்கியங்கள் விதந்து பேசு கின்றன. மீனிலிருந்து தவளையும், தவளையி லிருந்து குரங்கும், குரங்கிலிருந்து மனிதனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்ப்படைந்ததாக பரிணாமக் கோட்பாடு குறிப்பிடு கின்றது.

யப்பானியக் கவிதைகளில் தவளைகள் சிறப்பிடம் பெறுகின்றன. அவுஸ்திரேலியா "குயின்ஸ்லாண்ட்" பகுதி மக்கள் தவளைகளோடு பழகுவதில் தனியின்பம் காண்கின்றனர். தமிழிலக்கியங்களிலும் தவளைகள் குறித்த பல பதிவுகள் சுவாரஸ்யமாக இடம் பெற்றுள்ளன. அந்த வகையில் கம்ப ராமாயணம் கிட்கிந்தா காண்டத்திலே நுண்ணிழைமிகு கவித்துவத்தோடு தவளை பற்றிய அடர்த்தியான கற்பனையினைத் தரிசிக்க முடிகிறது.

சீதையைத் தேடியலைகின்ற இராமபிரான் பம்பை என்னும் பொய்கையினை அடைகின்றான். அப்பொய்கையின் பண்பினை எழிலான கற்பனையூடாகக் கம்பர்வெளிப்படுத்தும் பாங்கு அற்புதமானது. பம்பைப் பொய்கையிலே வாளை மீன்கள் வாள் போன்று நீரிலே செல்ல, நீர் நாய்கள் கழைக் கூத்தாடிகள் மூங்கிலின் மீது செல்வதைப்போலவும், கத்திகளின் குறுக்கே பாய்ந்து சாகசம் நிகழ்த்துவதைப் போலவும், வாளை மீன்களின் மேல் நடனம் புரிவதைப் போலச் செயற்பட அந்நிகழ்வைக் கண்டு புகழ்ந்து பாராட்டுவதைப் போல தவளைகள் கத்துவதாகக் கம்பனின் கருத்தேற்றம் தகுநயமாக அமைகின்றது.

"வலி நடத்திய வாளென வாளைகள் பாய
ஒலி நடத்திய திரை தொறும் உகள்வன நீர் நாய்
கலி நடைக் கழைக் கண்ணுளர் என நட கவினப்
பொலிவுடைத் தெனத் தேரைகள் புகழ்வன போலும்"

மழை காலத்திலே இராமபிரான், சீதா பிராட்டியின் பிரிவை எண்ணிப் புலம்புவதை வெளிப்படுத்தும் படலமாகக் "கார் காலப்படலம்" அமைகின்றது. அடர்த்தியான ஒப்புமையின் துணைகொண்டு கார்காலத்தின் இறுதியைக் கம்பர் கவித்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனை கமழப் பதிவு செய்கிறார். முடிவிலி அர்த்தம் சுமக்கும் தவளையின் குரலை அழகுற வெளிக் கொணர்கிறார்.

"கல்வியில் திகழ் கணக்காயர் கம்பலைப்
பல்விதச் சிறார் எனப் பகர்வ பல்லரி
செல்லிடத்து அல்லதொன்று உரைத்தல் செய்கலா
நல்லறி வாளரின் அவிந்த நா எலாம்"

ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் சிறுவர்கள் கூட்டாகச் சேர்ந்து சத்தமிட்டுப் படிப்பதே வழக்கமாகும். அச்சிறுவர்கள் போல ஒன்றிணைந்து பாடிய தவளைகள் மழைக்கால முடிவிலே ஓய்வடைந்து அடங்கிப் போயின. இந்நிகழ்வானது நல்லறிவுடையோர் உரிய இடத்திலே தவிர ஏனைய இடங்களில் எதனையும் பேசாது அமைதி காத்தலைப் போல அமைந்திருப்ப தாகக் கம்பர் சிறப்பிக்கின்றார். இன்னிசையடுக்குகளை இயல்போடு கட்டியெழுப்பும் மழைக்காலப் பாடகனான தவளை குறித்த பதிவினை வசீகரமாக வெளிப்படுத்தி யுள்ளார்.

சீதையைத் தேடிச் செல்லும் வானர வீரர்கள் தொண்டை நாட்டினை அடைகின்றனர். அந்நாட்டின் வளத்தினை வியக்கின்றனர். தொண்டை நாட்டின் செழிப்பினை நயாதீதம் மிளிரும் புனைவொன்றிலே கம்ப நாடன் காட்சிப்படுத்தும் விதம் அலாதியானது. தேர் போன்ற உயர்ந்த தென்னை மரத்தின். பாளையைக் கண்டு நாரை என்று கருதிக் கெண்டை மீன்கள் நடுங்குகின்றன. கூர்மையான நுனியும் வலிமையான தலை யாகிய அரும்பினையும் கொண்ட அல்லிமலர்த் தண்டைக் கண்டு தவளைகள் சாரைப்பாம்பெனக் கருதி நடுங்குவதாகக் கம்பர் காட்சிப்படுத்துகிறார்.

"தேரை வென்றுயர் தெங்கிளம் பாளையை
நாரையென்று நடுங்குவ கெண்டை மீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரை வன்தலைத் தண்ணிள ஆம்பலைச்
சேரை யென்று புலம்புவ தேரையே”

என்று புனைவின் வழி நிகழ்ந்தும் இந்திரஜாலத் தொடுகை (Magic Touch) கம்பநாடனின் ஆளுமையை பூரணமாக இனங்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரகாண்டத்தில் மீ



கம்ப காவியத்திலே குறிப்பிட்ட சில சொற்களை அலாதியன்போடு கம்பன் கையாள்வதை செய்யுட்களை நுணுகி நோக்கும்போது உணர்ந்து கொள்ளலாம். அவ்வகையில் "மீ" என்னும் ஒரேழுத்து ஒரு மொழி மீதான கம்பனின் காதலும் அளவு கடந்தே அமைந்துள்ளது. "மீ" என்பதற்கு மேலிடம், ஆகாயம், மகிமை, அதிகம் என்னும் அர்த்தங்கள் காணப்படுகின்றன. மேலிடம், அதிகம் என்னும் பொருளில் தகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த தருணங்களில் கம்பநாடன் "மீ" என்ற பதத்தினைக் கையாள்கின்றான். சுந்தரகாண்டத்தில் "மீ"யின் பிரயோகத்தினை நோக்குவதாக இச்சிறு கட்டுரை அமைகின்றது.

அனுமன் அசோகவனத்தினைச் சிதைத்து அரக்கர்களை அழித்த தகவலறிந்து அசோகவனம் புகுந்த இந்திரஜித் சகோதரனான அட்சகுமாரனின் சடலத்தைக் கண்ணுற்று, அனுமன் மேற்கடுங்கோபங் கொண்டு போர் தொடுக்கின்றான். அத்தருணத்தில் வாயுமைந்தன் உச்சமான சீற்றத்தோடு இந்திரஜித்தைத் தேரோடு தூக்கி எறிகின்றான். கண்ணின் மேலே சென்ற இமை மீள மூடுவதன் முன்னர், நினைப்பதற்கு மேலான வலிமையும் திறமையும் உடைய பகைவனான இந்திரஜித் வான வெளியின் மேலே சென்று காயங்களின் மேலே பெருகி வழிகின்ற குருதி புதிய புலால் நாற்றத்தோடு வெளிப்படத் தரையிலே வீழ்வதைக் கம்பநாடன் பின்வருமாறு காட்சிப்படுத்துகின்றான்.

"கண்ணின் மீச்சென்று இமையிடை கலப்பதன் முன்னம்
எண்ணின் மீச்சென்று எறுழ்வலித் திறனுடைய இகலோன்
புண்ணின் மீச்சென்று பொழிபுனல் பசும்புலால் பொடிப்ப
விண்ணின் மீச்சென்று தேரொடும் பார்மிசை விழுந்தான்"

இலங்கை மாநகரின் அழகினை எடுத்து விளக்குந் தன்மையாலும் "சுந்தரகாண்டம்" என்னும் பெயர் உண்டாயிற் றென்பர். அவ்வகையில், கம்பர் இலங்கை மாநகரின் வீடுகளில் குற்றேவல் மகளிர் செய்யும் தூய்மைப்படுத்தலை வசீகரமான கற்பனையாகப் பதிவுசெய்துள்ளார்.

"மாகாரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினின் அள்ளி
பாகாய செஞ்சொலவர் வீசுபடுகாரம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகு போன்ற இனிய வார்த்தைகளைப் பேசும் பணிப்பெண்கள், அகன்ற மேகங்களில் தோன்றும் மின்னற் கொடிகளைப் பிடித்துச்சேர்த்து விளக்குமாறாக்கி, அவற்றால் மேற்பகுதியின் (மீகாரம்) அனைத்திடமும் வாசனைப்பொடி களாகிய தூசிகளை அகற்றி ஆகாய கங்கை நீரை அழகிய தமது கைகளில் அள்ளித் தெளிக்கும் வீடுகளையுடையதாக இலங்கை மாநகரைச் சிறப்பிக்கின்றார். மேலும், இலங்கை மாநகரின் மதிலின் ஒளியால் கண்கூசிய சூரியன் "பொன்னின் மாநகர் மீச்செலான்" என்றும் விதந்துரைக்கின்றார். இத்தகைய தருணங்களில் "மீ" என்னும் பதம் "மேல்" என்ற கருத்தினை வழங்கி நிற்கிறது.

மேலே ஓங்கிய செம்பொன் மயமான ஆயிரம் சிகரங்கள் ஒளிவீசும் மைந்நாகமலையினை "மீயோங்கு செம்பொன் முடியாயிரம் மின்னிமைப்ப" என்றே கம்பநாடன் சுட்டுகின்றான். மேற்செல்லல் என்னும் கருத்தமைய "இருள்தர மிதித்து மீச்செல்வார்" "விசும்பின் மீச்செல்வார்" "விசும்பு எனும் பதத்தை மீச் செல்வான்" "வெம்புகைப் படலையின் மீச்செலவெருவி" என்னும் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளான்.

சிறப்புப்பொருளைத் தருவதற்கு ஒரே பொருளுடைய இருசொற்கள் தொடர்ந்து நிற்கும் வகையில் அமைவதை "மீமிசைச்சொல்" என்று குறிப்பிடுவர். இலங்கை நகர் அனுமனால் எரியூட்டப்பட்ட போது, "நெருக்கி மீமிசை ஓங்கு நெருப்பு அழல்" என்று கம்பன் சுட்டும் தொடர் வியப்புக்குரியதாக அமைந் துள்ளது. மீமிசை என்பது மிகஉயர்ந்த என்னும் பொருளைத் தருவதோடு "நெருப்பு அழல்" என்பன மீமிசைச்சொல்லாகவே இடம் பெறுவது நயாதீதமிகு சொற்கட்டுமானமாகும்.

மீக்கரிந்து, மீ எழுந்த, மீத்தாம் நிமிர், மீப்போய், மீயுற விண்ணிடை, மீக்கான்ற என்னும் எண்ணற்ற தொடர்களில் "மீ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது "மேல்" என்று பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது. எனினும் மீயுயர் விசும்பையும், மீச்சொரிந்தனர் என்னும் தொடர்களில் அதிகம் என்னும் அர்த்தத்தினை வெளிப்படுத்துகின்றது. இவ்வகையில் மொழியின் நுண்ணிய வேறுபாட்டினையும் நன்குணர்ந்து கம்பன் பதிவு செய்துள்ளான். "மீ" என்ற ஒரேழுத்து ஒருமொழி மீது அதீத காதல் கொண்டு, வீரியத்தோடு பயன்படுத்திய பண்பிலும் கம்பநாடன் ஏனைய படைப்பாளிகளிடமிருந்து மாறுபட்டே தென்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை மொழி வங்கியில் விழி



அலாதியான கவிதானுபவத் தொற்றலை நிகழ்த்தும் சாத்தியங்களை பேரிலக்கிய மொன்றின் பெருமளவு பாடல்களில் பதிவு செய்த மேதையாகக் கம்பன் போற்றப்படுகின்றான். பயிலுந்தோறும் தெவிட்டாத இன்பத்தையும் புதிர் முடிச்சவிழ்ப்புக்களையும் கம்ப காவியம் வெளிப்படுத்துகிறது. இதர இலக்கியங்களை விட பன்முக அதிர்வுகளை நிகழ்த்தும் வகையிலே புனையப்பட்டுள்ளது. வட மொழிக் காவியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகலென அமைந்தாலும், பல தருணங்களில் மூலப்பிரதியிலிருந்து விலகி தற்புதுமையான கட்டமைப்போடு வசீகரமான கவித்துவத்தை வழங்குகின்றது.

உலக இலக்கியங்கள் எவற்றிலாவது கம்பராமாயணம் அளவிற்கு "கண்" குறித்த தகுநயமான பதிவுகளைத் தரிசிக்க முடியுமா? என்பது கேள்விக்குறியே! விழி, நேத்திரம், நயனம், நாட்டம் என்பன இராமாயண காவியத்தில் கண்ணுக்குச் சமமான அர்த்தத்தைத் தருகின்றன. "கண்" பற்றித் தினுசுதினுசாக விந்தை மொழி வங்கியிலிருந்து வீரியமான கற்பனைகள் வெளிப் பட்டுள்ளன.

கவித்துவ ஆளுமையின் குறிகாட்டிகளில் ஒன்றாகவே அணியலங்காரம் அமைகின்றது. உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, முரண் போன்ற அழகான உத்திகளின் ஊடாக கம்பன் நயனத்தின் நயத்தினைப் படிமப்படுத்தியுள்ளான். உவமை அணியினை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களில் நிபுணத்துவம் வாய்ந்த கற்பனையைக் காண முடிகின்றது. கண்ணுக்குப் பன்முக உவமானங்களை எடுத்தாள்கின்றான். வாள் (வாள் நெடுங்கண், நீட்டுவாள் அனைய கண்); வேல் (அயில் விழி, நச்சுவேற் கருங்கண்) கயல் (செங்கயல் அனைநாட்டம், அம்கயல் கருங்கண்) குவளை (குவளையன்னகண், பானல் அம்கண்கள்), தாமரை (கமலக்கண், பங்கயம் ஒத்த செங்கண்) நெருப்பு (தழல் விழியாள், கனல் கண்ணான்); நஞ்சு (நஞ்சு அடுத்த நயனியார், நஞ்சு சூழ் விழியாள்) கூற்றம் (கூற்றனைய கண், கூற்றுறழ் நயனங்கள்) அம்பு (கணைக்கருங்கண்) மாவடு(மாழை ஒண்கண், மாவகிர் இவை எனப்பொலிந்த கண்) தேன்(தேனே புரை கண்) வண்டு (தும்பி எனச் சிலர் கண்) மழை (மழைக்கண்) பறை (பறை புரை விழிகள்) என்பன கண்ணுக்கு உவமைகளாக அமைந்து அகலித்த வியப்பினை நிகழ்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபான உவமானங்களை மாற்றியமைத்து, உவமேயங் களையே உவமானங்களாக்கும் புதுமையான பண்பினைக் கம்பனிடம் காணமுடிகிறது. வெறுமனே "உருவகம்" என்ற நிலையினையும் கடந்து புத்தெழிலோடு அதிசயிக்கச் செய்யும் வகையிலே அவற்றினை வெளிப்படுத்துகின்றான். இராம பிரானின் அம்பின் தன்மையை "தையலார் நெடு விழியெனக் கொடியன சரங்கள்" என்று மாற்றி உவமித்தல் குறிப்பிடத்தக்கது.

"மையவாம் குவளை எல்லாம்
மாதர் கண் மலர்கள் பூத்த"

என்று வருணிக்கும் போதும் கம்பனின் மாற்றி யோசிக்கும் திறனை வியக்க முடிகின்றது.

முரண் சொற்களின் வழியே தற்புதுமையான அர்த்தங் களைக் கட்டமைப்பதிலும் கம்பனின் ஆற்றல் அபாரமானது. பூக்கொய் படலத்திலே சோணையாற்றங்கரையில் மகளிர் மலர் கொய்யும் போது அவர்களது விழிகளும் பூக்களும் ஒரே அலைவரிசையில் சந்திக்கும் விதத்தை

"நஞ்சினும் கொடிய நாட்டம்
அமுதென நயந்து நோக்கி"

என்று முரண்சுவை ததும்ப விபரிக்கின்றான் "நீரொடு நெருப்புக் கான்ற நிறை நெடுங்கண்கள்" என்று முரணான இரு பூதங்களின் சேர்க்கையாகக் கண்களைச் சுட்டுவதும் விநோத மானதே! மேலும் அனுமனின் வாலிலே கொளுத்தப்பட்ட அக்கினியை சீதாப் பிராட்டி அணைக்கும் சந்தர்ப்பத்தில், "நெற்றிக் கண் வன்னியும் குளிர்ந்ததன்றே" எனக் குறிப்பிடும் போது கற்பனையின் உச்சம் வியக்க வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதனின் அழகினை வென்ற விழிகளை உடையவர் களாகவும், கொடிய நஞ்சும் வியந்து பயப்படும் கண்களைக் கொண்டவர்களாகவும் பெண்களை உயர்வு நவிற்சியில் சுட்டும் "வேளை வென்ற விழிச்சியர்" "நஞ்சும் அஞ்சும் விழி" என்னும் தொடர்களிலும் கம்பனின் தனித்துவத்தை அடையாளங் காணலாம். "காதொடு குழை பொரு கயற்கண்" என்று மகளிரின் விழிகள் காதுகளிலுள்ள தோடு வரை சென்று போர் செய்வதாகப் புனைந்துரைப்பது உயர்வு நவிற்சி யின் உச்சமாக அமைகிறது.

விதேக நாட்டு மருத நிலங்களை வருணிக்கும் பாங்கு மனதிற்கு இதமளிப்பதாக அமைகின்றது. கழனிகளில் களை அகற்றும் மகளிரின் கண்களது நிழல் நீரிலே விழுகின்றது. விம்பத்தை மீன் என்று கருதிய நாரைகள். கூரிய அலகினால் கொத்தி நாணங் கொள்வதாகக் கம்பன் காட்சிப்படுத்துகிறான்.

"பள்ளி நீங்கிய பங்கயப்
பழன நன்னாரை
வெள்ள வான்களை களைவுறு
கடைசியர் மிளிர்ந்த
கள்ளவாள் நெடுங்கண்ணிழல்
கயலெனக் கருதா
அள்ளி நாணுறும்"

திருமாலாகிய இராமன் பெண்களின் கண்களின் வழியே புகுந்து இனிமையை நல்குவதால் "கண்ணன்" என்ற மூல நாமத்திற்குச் சான்றாகிறான் எனக் கம்பர் தற்புதுமையாகக் குறிப்பிடுகின்றார்.

"வீதி வாய்ச் செல்கின்றான் போல்
விழித்திமையானது நின்ற
மாதரார் கண்களூடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாவுமான் தேரிற் செல்வான்
யாதினும் உயர்ந்தோன் தன்னை
யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொருள் உணர்த்தி விட்டான்"

காவியத்தலைவனது மூல நாமத்தினை வசீகரமான கற்பனை யூடாக வருவித்து கற்போருக்குக் கனிவை நல்கிவிடுகிறான். மேலும் இராமபிரானின் கருமை நிறத்திற்கும் புதுமையான விளக்கத்தினை வழங்க முனைகிறான்.

"பஞ்சணி விரலினார் தம்
படை நெடுங்கண்கள் எல்லாம்
செஞ்செவே ஐயன் மெய்யில்
கருமையைச் சேர்ந்தவோ தாம்
மஞ்சன மேனியான் தன்
மணி நிற மாதரார் தம்
அஞ்சன நோக்கம் பார்க்க
இருண்டதோ அறிகிலேமால்"

வேல் போன்ற கருவிழிகள் பதிந்ததால் திருமேனி கருமை நிறம் பெற்றதோ? மைதீட்டிய கண்கள் பதிந்ததால் கருமையானதோ?, என்று தெரியவில்லை எனக் கம்பன் வியக்கும் தன்மை அலாதியானது.

காவிய நாயகியான சீதையின் விழியழகினை கம்பநாடன் பன்முகப் பரிமாணங்களில் எடுத்து விளம்பியுள்ளான். ஆடவரின் கண்களுக்கு விருந்தாக அமைகின்ற மகளிரது "விழிக்கொரு விழவு" எனச் சீதை சிறப்பிக்கப்படுகிறாள். சூர்ப்பனகையானவள் இராவணன் செவிகளில் ஊற்றும் சோபன மதுமொழிகளிலும் சீதையின் அழகு மிளிர்கிறது. "வதனம் மைதீர் கஞ்சத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்றேனும் கடலிலும் பெரிய கண்கள்" என முரண் அணி ததும்ப விழிக்கீர்த்தி பதிவாகிறது.

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழி கொண்டாள்"

எனவும் மிதிலாவின் நயன எழில் விதந்துரைக்கப்படுகின்றது. கன்னிமாடத்திலே "கண்ணொடு கண்ணினைக் கவ்விய" தலைவனை அகத்திலே இருத்தி காமத்திலே வெதும்பும் பிராட்டி விழிக்குள் நுழைந்தவனை காணமுடியாமற் தவிக்கும் வேதனையை

"கண்ணுளே இருந்த போதும்
என் கொல் காண்கிலா வே"

என்று கம்பன் பதிவு செய்யும் பாங்கு அற்புதமானது. அசோகவனத்திலே தனித்துத் துன்புறும் காலத்திலும் உறக்கமும் விழிப்புமற்ற கண்களோடு சீதாபிராட்டி காணப்படுவதை "துயில் எனக் கண்கள் இமைத்தலும் மகிழ்தலும் துறந்தாள்" என்று அவலச் சுவை வெளிப்படக் காட்சிப்படுத்துகின்றான்.

பெரிய வாய்ப்பரவை ஒவ்வா
பிறிதொன்று நினைத்துப் பேச
உரிய வாய் ஒருவர் உள்ளத்து
ஒடுங்குவ அல்ல உண்மை
தெரிய ஆயிரங்கால் நோக்கின்
தேவர்க்கும் தேவன் என்னக்
கரியவாய் வெளிய ஆகும்
வாள் தடங் கண்கள் அம்மா

என்னும் செய்யுளில் சீதையின் கண்களை விடப் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளொன்றை ஒருவர் உள்ளத்திலே நினைப்பது அரியதாகும் என்று வியப்பதும் நயம் செறிந்தது.

வனம்புகு படலத்தில் கானகத்தின் வளத்தினை இராமன் சீதைக்குக் காண்பித்து மகிழ்கிறான். மயில்களும் மான்களும் சீதாபிராட்டியின் கண்களின் அருகே வருவதை இராமன் குறிப்பிடும் தருணமும் வசீகரம் மிகுந்ததாகவே அமைகின்றது.

நெய்ஞ்சிறை நெடுவேலின் நிழலுறு திறமுற்றிக்
கைஞ்ஞிறை நிமிர் கண்ணாய்! கருதின இனமென்றே
மெய்ஞ்ஞிறை விரிசாயல் கண்டும் நின் விழி
மஞ்ஞையும் மடமானும் வருவன பலகாணாய்

வேலின் சாயலும், துன்புறுத்தும் திறமையும், கையளவு அடங்காத் தன்மையும் உடைய சீதாப்பிராட்டியின் விழிகளை தமது இனமெனக் கருதிய மானும், மயிலும் அருகணைவது விழிகளின் சிறப்பிற்கு அணி செய்கின்றது.

இலங்கை மாநகரின் அரக்கியர் கூட அழகுமிக்க கண்களை உடையவராகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். கயலுக்கும், யமனுக்கும், மன்மதன் அம்புகளுக்கும் ஒப்புமையில்லாத விழிகளோடு மது வருந்தி மயக்கம் கொள்ளும் அரக்கியரைக் களியாட்டுப் படலத்திலே காணமுடிகின்றது.

"கயல் காலன் வைவேல்
காமவேள் கணை என்றாலும்
இயல் வருகிற்கிலாத
நெடுங்கணார்"

என்று அரக்கியரின் நயனத்தைக் கம்பநாடன் எழில் ததும்பப் பதிவு செய்கிறான். மேலும் அரக்கியர் துயில் நீங்கி எழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகினைஅனுமனின் தரிசனமாக காட்சிப்படுத்தும் போதும் கனதியான நயத்தோடு

"மெள்ளவே இமைநீக்கி அஞ்சன விழுது வேய்ந்த
கள்ளவாள் நெடுங்கண் என்னும் வாளுறை கழிக்கின்றாரை"

என்று உறையிலிருந்து வெளிப்படும் வாளாக உறக்கம் நீக்கும் விழியினைச் சுட்டுகின்றான்.

"கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்" என தசரதனின் அவலத்தினை உணர்த்தும் போதும் உறுப்பாவளியில் விழியின் பெறுமானத்தை நன்கு உணரச் செய்து விடுகின்றான். இவ்வாறு கம்பகாவியம் முழுமையும் விந்தை மொழி வங்கியான கம்பனிடம் "விழி" குறித்த பதிவுகள் உன்னத ஆளுமையோடு திகழ்ந்துள்ளன. தீராத தேடலோடு நோக்கின் தெவிட்டாத பாடல்களில் ஆயிரமாயிரம் அலாதியான நயங்களைத் தரிசிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனை நகலெடுத்த திரையிசைப் பாடலாசிரியர்கள்



தமிழிலக்கியப் பரப்பில் கொண்டாட்டத் திற்குரிய முதன்மை மேதையாகக் கம்பனே திகழ்கின்றான். சமூகக் கட்டமைப்பு எல்லை களைப் புறந்தள்ளி பொதுவெளியில் நின்று தரிசிக்க முயன்றுள்ளான். தான் வாழ்ந்த காலத் திற்கு முன்னைய குழுமங்களின் கலைக் கூறுகளை நேர்த்தியாக உள்ளெடுத்து உன்னத கலானுப வத்தின் தொற்றலாக இராமகாதையைப் புனைந் துள்ளான். தெய்வம், மனிதம் என்னும் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளின் சமனிலையினைத் தகவமைத்து பன்முகப் பரிமாண உணர்ச்சி மோதுகையினை உருவாக்கி கற்போரைத் திகைக்க வைத்துள்ளான். அவனது கற்பனைத்திறனும் விந்தை மொழி யினை முகாமைத்துவம் செய்யும் பாங்கும் அலாதியானவை. கொள்வாரும் கொடுப்பாருமற்ற சமுதாய உருவாக்கச் சொப்பன வனப்பியலாகவே கம்பராமாயணம் காணப்படுகின்றது. இத்தகைய வசீகர அதிர்வுகளின் கலவையால் ஈர்க்கப்பட்ட திரையிசைப்பாடலாசியர்கள், கம்பனது விருத்தங்களை மெட்டுக்கேற்பத் திருத்தஞ்செய்து பல்வேறு தருணங்களில் நகலெடுத்துள்ளனர்.

(i) கண்ணதாசன்

தமிழிலக்கியங்களின் எளிய வடிவமாகத் திரையிசைப் பாடலை மாற்றிவிட முயன்ற பெருமை கண்ணதாசனுக்கு உண்டு. கம்பகாவியத்தின் மீதான பரிச்சயத்தால் எண்ணறு பாடல் களினை நகலாக்கம் செய்துள்ளார். "தேன்", "வண்ணம்", "தான்" என்னும் சொற்களில் கம்பன் மொழிப் பல்படியாக்கம் நிகழ்த்திய செய்யுட்களை திரைப்படப்பாடல்களில் மாற்றியமைத்த அழகு வெகு பிரசித்தம்! "விதியின் பிழை" என்பதை "விதி செய்த குற்றம்" எனப் பிரதியெடுத்தமையும், மும்மூர்த்தியும் தேவியரை மேனியில் வைத்த தன்மையும் ஆய்வுகளில் தேய்வியம்பலாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அசோகவனத்திலே அவலப் பிரதிமையாக அமர்ந்திருந்த சீதை அனுமனிடம் இராகவனின் கூற்றினை நினைவுபடுத்துவதைப்போல

"இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன்" என்று சுட்டுவதை

"உன்னையல்லால் ஒரு
பெண்ணை இனி நான்
உள்ளத்தினாலும் தொடமாட்டேன்"

(படம் - வசந்தமாளிகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கண்ணதாசன் எழுதிய விதமும் இலக்கிய உலகிற்கு புதிய தகவலன்று. கண்ணதாசனின் பாடல்கள் திரள் மக்கள் பண்பாட்டில் உச்சமான வசீகரத்தைப் பெற்றதால் எண்ணற்ற தருணங்களில் நுணுகி நோக்கப்பட்டுள்ளன. இராமபிரான் மிதிலைமா நகரத்திலே, ஜனகனின் வில்லினை நாணேற்றி முறித்த தகவலை செவியில் வாங்கிய சீதையின் நிலையை,

"இல்லையே நுசுப்பென்பார் உண்டு உண்டு எண்ணவும்
மெல்லியல் முலைகளும் விம்ம விம்முவாள்" எனக் கம்பநாடன் வருணிக்கிறான். இராமகாதையில் இதயத்தைப் பறிகொடுத்த கண்ணதாசன்,

"உண்டென்று சொல்வதுந்தன் கண்ணல்லவா
வண்ணக் கண்ணல்லவா
இல்லையென்று சொல்வதுந்தன் இடையல்லவா
மின்னல் இடையல்லவா"

என்று திரைநாயகியை சீதையின் நகலாகக் காட்சிப் படுத்துகிறார். மேலும் "வடுவில் மாவகிர் இவையெனப் பொலிந்த கண்" என்ற கம்பனின் கவிக்கோலத்தைப் பிரதிசெய்து "மாவடு கண்ணல்லவோ?" (படம் - நெஞ்சில் ஊர் ஆலயம்) என எடுத்துரைக்கும் விதமும் தக்க சான்றாகும்.

இராவணனின் வேட்கைக்கு இணங்குமாறு சீதையை அரக்கியர் அதட்டும்தருணத்தில் அவள் அழுது கொண்டே சிரிக்கின்றாள். இதனைக் கம்பர், "கண்கள் கலுழ்ந்தே நகுகின்றாள்" என்று முரண் சுவை ததும்பக் காட்சிப்படுத்துகின்றார். "நான் அழுது கொண்டே சிரிக்கின்றேன்" என்ற கண்ண தாசனின் பாடல் வரியும் நிழற் பிரதியாகவே அமைகின்றது.

(ii) வைரமுத்து

திரையிசைக்குள் இலக்கிய அடர்த்தியைப் புகுத்திவிட பகீரதப்பிரயத்தனம் நிகழ்த்தும் பாடலாசிரியராக வைரமுத்து அடையாளப்படுத்தப்படுகிறார். தமிழிலக்கியங்களை எளிமைப் படுத்துவதிலும் கண்ணதாசனின் நீட்சியாகச் செயலாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயண நகலெடுப்புப் பாடல்களின் உருவாக்கத்தினை வைரமுத்துவிடமும் அதிகமாகவே அவதானிக்க முடிகிறது.

மெல்லியல்புகளின் உறைவிடமான சீதை நடந்து செல்லும் போது பாதம் நோகும் என்று பூமாதேவி பூக்களை பரப்பி விடுகின்றாள்.

"வல்லியை உயிர்த்த நில மங்கையிவள் பாதம்
மெல்லிய உறைக்கும் என அஞ்சி வெளியெங்கும்
பல்லவ மலர்தொகை பரப்பினள்"

மனைக்கிழத்தியை அளவு கடந்து நேசிக்கும் தலைவன் பாடுவதாக கம்பனின் கற்பனையை வைரமுத்து பிரதியெடுத் திருக்கிறார்.

"நீ நடந்தால் பாதம் நோகும்
பூ விரிப்பேன் மானே"
(படம் - மூன்று முகம்)

சீதையின் நயன எழிலுக்கு அற்புதமான உவமை உருவகங் களைக் கம்பநாடன் பதிவு செய்துள்ளான். கம்பனின் கற்பனைகள் யாவும் திரையிசைப்பாடலாசிரியர்களால் கடன் வாங்கப் பட்டுள்ளன.

"நஞ்சிடை அமிழ்தம் கூட்டி
நாட்டங்களான என்ன"

என்றும் ஓரிடத்தில் புதுமையான வகையிலே எடுத்தியம்பு கிறான். நஞ்சும் அமுதும் இணைந்த விழிலயத்தின் நகுநயத்தலால் கவரப்பட்ட வைரமுத்து,

"கொஞ்சம் நஞ்சு கொஞ்சம் அமுதம்
ஒன்றாய்ச் சேர்ந்தால் எந்தன் கண்கள்"

என நாயகி பாடுவதாக எழுதியுள்ளார்.

சோனையாற்றங்கரையிலே தசரதனின் சேனை தங்கி யிருக்கையில் மகளிர் பூக் கொய்யும் அழகினை "பூக்கொய் படலம்" சிறப்புற வருணிக்கின்றது. ஆடவரும் மகளிரும் மகிழ்நெறியின் பாற்பட காமனே நாணங் கொண்டதாகக் கம்பன் நயம்பட இயம்புகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செய்யிற் கொள்ளும் தெள்ளமுதச்
செஞ்சிலையென்று
கையிற் பெய்யும் காமனும் நாணும்”

களவியலின் அந்தரங்கத்தை பாட்டாளி வர்க்க இளைஞன் ஒருவன், முக்காடு போட்ட மொழிகளால் முதலாளிக்கு விளக்குவதான பாடலொன்றை (படம் -ஆயிரம் நிலவே வா) வைரமுத்து புனைந்துள்ளார். அதில்,

“காமனே நாணங் கொண்டான் சொல்லியது தீராது” என்று கம்பனைத் துணைக்கு அழைத்துள்ளமையைக் காணலாம்.

சூரியகுல வேந்தர்களின் மேன்மையை கம்பகாவியத்தின் பல்வேறு செய்யுட்களில் அவதானிக்க முடிகிறது. பரிதி பரம்பரை வள்ளலான மாந்தாதா வின் புகழை,

“புலிப்போத்தும் புல்வாயும்
ஒரு துறையில் நீர் உண்ண
உலகாண்டோன்”

என்று முரண் இயற்கை அழகியலோடு எடுத்தியம்புகிறார். “புலியும் மானும் தேநீர் பருகுது உன்னால் ஈஸ்வரா” (படம்- கண்ணெதிரே தோன்றினாள்) என்று வைரமுத்து மீட்டெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிட்கிந்தையின் கொற்றவனான வாலியின் மேனியில் இராமபாணம் பாய்ந்த போது, வாதப் பிரதிவாதங்கள் நிகழ்கின்றன. இராமபிரானின் தர்க்கித்தலில் நியாயத்தை உள்வாங்கி, சிந்தை தெளிவடைந்த வாலி “பாவ நீ தரும நீ பகையுநீ உறவு நீ” என்று பிரார்த்தனைக்குரிய பிரதிமையாகப் போற்றுகிறான். இலங்கை அகதி முகாமில் தத்தெடுத்த குழந்தையைத் தாயொருத்தி “எனது சொந்தம் நீ எனது பகையும் நீ” என்று சீராட்டுவதாக (படம் - கன்னத்தில் முத்தமிட்டால்) வைரமுத்து எழுதியுள்ளார்.

சீதையின் பிரிவுத்துயரால் வருந்தும் இராமனை “பம்பை” என்னும் பொய்கையின் காட்சிகள் மேலும் துன்புறுத்துகின்றன. பொய்கையின் நிகழ்வுகளைப் படிமப்படுத்தும் போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்டு தமிழ்ப்பாட்டு இசைக்கும்" என்று கம்பர் மொழிப்பற்றினைப் பதிவு செய்கிறார். மொழியின் காதலனான வைரமுத்துவும் "தமிழில் குயில் பாடவேண்டும்" என்று (படம் - திருடா திருடா) நகலெடுக்கிறார். சீதையின் இதழோடு இதழ் பதிப்பதாக இராமனது நினைவிலே காட்சி யொன்று நீந்துகிறது. கனவா? என்று ஐயம் தோன்ற, விழித்திருக்கும் போது கனவு உண்டாவது சாத்தியமில்லையே எனத் தடுமாறுகிறான்.

"கண் துயில் இன்றியும் கனவு உண்டாகுமா?" என்று கம்பர் வினா எழுப்பியதை

"விழித்தெழுந்ததும் மறுபடி கனவுகள்
வருமா வருமா...?
விழித்திருக்கையில் கனவென்னைத்
துரத்துது நிஜமா நிஜமா?"
(படம் - மஜ்னு)

என்று வைரமுத்து பிரதி செய்கிறார்.

"நிலவொன்று கண்டேன் என் ஜன்னலில்" (படம் - கைராசிக்காரன்) என்று புனைந்த எண்ணத்திற்கும் மூலவர்ணம் "சாளரந்தோறும் சந்திர உதயம் கண்டார்" என்ற கம்பநாடன் சிந்தனையே என்பது தெளிவாகும்.

(iii) வாலி

இராமகாதையை முற்று முழுதாகக் கற்றறிந்து "அவதார புருஷன்" என வசன கவிதையில் மீள்படைப்பாக்கம் செய்தவர் வாலி! ஆங்கில மொழிக்கையாளுகையும், இயைபுத் தொடைகளும், ஓசைச் சொல்லடுக்குகளும் இடம் பெறுமளவிற்கு, திரையிசைப்பாடல்களில் இலக்கிய இலகுபடுத்தல் வாலியிடம் அருகியே காணப் படுகிறது.

பம்பைப் படலத்தில் சீதையின் நினைவு வெப்பத்தால் அவலமுற்று இராமன் உறங்காதிருக்கிறான். நிலம், மலை, ஆகாயம் என அனைத்துமே உறங்குகின்றன.

"மண் துயின்றன நிலைய மலை துயின்றன மறுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் துயின்றன விரவு பணி துயின்றன பகரும்
விண் துயின்றன குழுதும் விழி துயின்றன பழுதில்
கண் துயின்றில நெடிய கடல் துயின்றன களிறு"

மறை நாயகன் படும் வேதனையை நகலெடுத்து திரைநாயகனுக்காக வாலி பல பாடல்களில் மாற்றியமைகிறார்.

"நீர் தூங்கும் நிலமும் தூங்கும்
ஆகாய நிலவும் தூங்கும்
நான் தூங்க மாட்டேன்"
(படம் - வாசலில் ஒரு வெண்ணிலா)

"பொன் வானில் மீனுறங்க
பூந்தோப்பில் தேனுறங்க
அன்பே உன் ஞாபகத்தில்
எங்கே போய் நானுறங்க"
(படம் - வசந்த காலப் பறவைகள்)

சீதையின் விலகலால் அவலங் கொண்ட இராகவனுக்கு நோக்குமிடமெல்லாம் பிராட்டியின் விம்பமே தோன்றுகிறது. இலக்குவனிடம் தன்னிலையினைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்.

"கானகம் முழுவதும் கண்ணில் நோக்குங்கால்
சானகி உருவெனத் தோன்றும் தன்மைய"

கம்பரின் பாடலடிகளால் பாதிப்புற்ற பாரதி "பார்க்குமிடத்திலெல்லாம் உன்னைப்போல் பாவை தெரியுதடி" என்று விளம்பியதைப்போல வாலியும்

"என் மனம் உன் வசமே கண்ணில்
என்றும் உன் சொப்பனமே
விழிகாணும் காட்சி யாவும்
உந்தன் வண்ணக்கோலந்தான்"
(படம் - ஊரெல்லாம் உன் பாட்டு)

என்று பாடல் புனைந்துள்ளமை நோக்குதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV) பா.விஜய்

தமிழிலக்கிய உள்ளீடுகளின் எளிமைப்படுத்தலாகவும், திரைப்பாடல்களின் ராஜ வீதியில் தேரோட்டிய முன்னோடி களின் நயமிகு வரிகளின் மீள்வார்ப்பாகவும் பல பாடல்களைப் பா.விஜய் புனைந்துள்ளார்.

சீதையின் இடையழகைக் கம்பன் வருணித்த நயம் இலக்கிய உலகிலே வெகு பிரபலமானது!

"பரம் பொருள் என்ன யார்க்கும்
இல்லையுண்டு என்ன நின்ற இடை" என்னும் விந்தைமிகு கற்பனையால் கவியுலகையே கம்பன் மிரட்டி விட்டான். கம்பனிடம் கடன் பெற்று, பா.விஜய் பின்வருமாறு திரைப் பாடலில் பதிவு செய்கிறார்.

"இடையும் இறைவனும் ஒன்றுதான்
இரண்டும் இருந்தும் தெரிவதே இல்லை"
(படம்- போக்கிரி)

சீதையின் பேரழகைக் கண்டவர்கள் இமைக்கும் தருணத்தில் அவளது அதிசய அழகினைக் காண முடியாத தன்மை யால், இமையாத விழிகள் இல்லையே என வாடி நிற்கின்றனர்.

"கமையாள் மேனி கண்டவர் கண்டவர்
காட்சிக் கரை காண
இமையா நாட்டம் பெற்றிலம் என்றனர்"

கம்பனது கவித்துவத்தில் மூழ்கி எழுந்த பா.விஜய்,

"இமைக்கும் போது உன் முகம்
தெரிவதில்லை வாடினேன்
இமைகள் இரண்டை நீக்கிடும்
மருத்துவங்கள் தேடினேன்"
(படம் - பார்வை ஒன்றே போதுமே)

என்றவாறாக நகலாக்கம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(V) ஏனையோர்

(அ) நா.முத்துக்குமார்

இராமன் மீது எல்லையற்ற பாசங் கொண்ட குகன் "எப்போதும் உன்னோடு இருப்பேன். பகைவரால் பிரிவு வந்தால் உனக்கு முன் இறப்பேன்" என்று கூறி இராமனைப் பிரிய முடியாது தவிக்கிறான்.

"ஒருபோதும் உறைகுவென்
உளரானார் மருவலர் எனின்
முன்னே மாய்குவென்"

என்று குகன் விளம்புவதை பிரதியெடுத்து, காதலன் காதலிக்கு ஆறுதல் கூறுவது போல,

"உனக்கென இருப்பேன்
உயிரையும் கொடுப்பேன்
உன்னை நான் பிரிந்தால்
உனக்கு முன் இறப்பேன்"

(படம்- காதல்)

என நா.முத்துகுமார் நகலெடுத்துள்ளார்.

ஆ) புலமைப்பித்தன்

மகளிர் வதனத்திற்கு நிலவை உவமை யாகக் கூறுதல் மரபாகும். நிலவு தேய்ந்து வளர்வதால் உவமானத்தினை கம்பர் அங்கதத்திற்குஉட்படுத்தும் அழகு தனித்துவமானது.

"தண்மதியாம் என உரைக்கத் தக்கதோ
வெண்மதி பொலிந்தது மெலிந்து தேயுமால்"

கம்பரின் புதுமை மிகு தர்க்கித்தலால் ஈர்க்கப்பட்ட புலமைப்பித்தன் "இதழில் கதை எழுதும் நேரமிது" என்று தொடங்கும் திரையிசைப் பாடலில் அக்கற்பனையை மீள் பதிவாக்கம் செய்கிறார்.

"நாளும் நிலவது வளருது தேயுது
நங்கை முகமென யாரதைச் சொன்னது?

(படம் - உன்னால் முடியும் தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) அகத்தியன்

கம்பனின் காவியத்தில் திரிசடையைக் கனவுகள் துரத்துகின்றன. ஒவ்வொரு கனவின் பலனையும் சீதைக்கு எடுத்துரைக்கின்றாள். "உறக்கமில்லாததால் கனவு தோன்றவில்லை" எனச் சீதை தன்னிலை விளக்கம் செய்கிறாள். "துயிலிடை ஆதலின் கனவு தோன்றல" என்னும் கம்பனின் கற்பனையை "உறக்கமே எனக்கில்லை கனவில்லையே" (படம் - காதல்கோட்டை) என்று அகத்தியன் பிரதி செய்துள்ளார்.

ஈ) இளையராஜா

"மிக்க வேந்தர் தம்மெய்யழி சாந்தொடும்
புக்க மங்கையர் குங்குமம் போர்த்தலால்"

என்று கம்பர் கூடற்பொழுதினைப் படிமப்படுத்துவதை நகலெடுத்த இளையராஜா "சந்தன மார்பிலே குங்கமம் சேர்ந்ததே" (படம் -நாடோடித்தென்றல்) என எழுதியுள்ளார்.

"நீரில் மூழ்கும் செந்தாமரை" என்ற கம்பனின் காட்சிப் படிமமே பாடலாசிரியர் தாமரையால் "நீருக்குள் மூழ்கிடும் தாமரை" என (படம்- வாரணம் ஆயிரம்) நகலெடுக்கப் பட்டுள்ளது. திரைப்படப் பாடலாசிரியர்களின் எண்ணற்ற கவிக் கோலங்களின் மூலமாக கம்பனே திகழ்கிறான் என்பது தூலம். கம்ப காவியத்தின் நக லெடுப்புப் பாடல்கள் குறித்த பதிவினை சிறு வியாசம் ஒன்றிலே அடக்கி விடமுடியாது. "துமிதம்", "குருதிப் புனல்" போன்ற அற்புதமான சொற் கட்டுமானங்களை அறிமுகப்படுத்திய மேதமையாளனிடம் கடன் பெறுவதை பெரும் கொடுப்பனையாகவே திரைப்படப்பாடலாசிரியர்கள் கருதி வந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லனும் வில்லியும்



தமிழ்மொழியிற் புகுந்த சில வார்த்தைகள் தூய தமிழ் போன்றதொரு மாய அடையாளத்தை தக்க வைத்தபடி உபயோகத்திலே உள்ளன. பிரெஞ் மொழி அடியாகப்பிறந்த ஆங்கில வார்த்தையான "Villain" தமிழிலே நுழைந்து "வில்லன்" என வழங்கப்படுகின்றது. பகைவன், மாற்றான் போன்ற சொற்களே எதிர் நாயகனைக் குறிக்க பழந்தமிழில் பயன்படுத்தப்பட்டன. எனினும் திரைப்படங்களும், நவீன இலக்கியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் "வில்லன்" என்ற சொல்லைக் கையாள, நாளடைவில் தூய தமிழ் போன்ற தோற்றப்பாட்டோடு வெகுமக்கள் தளத்திலே புழக்கத்திற்கு வந்துவிட்டது. எதிர் நாயகியைக் குறிக்க ஆங்கில மொழியில் "Female Villain", 'Villainess", 'woman villain" போன்றன கையாளப்படுகின்ற நிலையில், தமிழ் சமூகம் வில்லன் என்ற பதத்திற்கு "வில்லி" என்ற எதிர்ப்பாற் சொல்லைப்பயன்படுத்தி வருவது வேடிக்கைக்குரிய பிறிதொரு விடயமாகும்.

"வில்லன்", "வில்லி" என்னும் இரு பதங்களும் தமிழில் புதியனவல்ல. ஏற்கெனவே வேறோர் அர்த்தத்திலே தமிழிலக்கி யங்களில் பயன்படுத்தப்பட்டவைதான்! "வில்லை ஏந்தியவன்" என்பதே அவ்விரு பதங்களுக்குமான பொருளாகும். கம்ப ராமாயணத்திலே கங்கை வேடனான குகனை, கம்பர் "வில்லன்" என்று குறிப்பிடுகின்றார்.

"தும்பியின் குழாத்தில் சுற்றும் சுற்றத்தன் தொடுத்த வில்லன்"

என்ற அடியிலே யானைக்கூட்டம் போல சூழ்ந்து நிற்கும் சுற்றத்தவரையும், நாணேற்றிய வில்லினையும் உடையவனாகக் குகன் சுட்டப்படுகிறான். கம்பனது சொல்லாட்சியின் பின்புலத்தில் நோக்கினால் கதாயுதம் ஏந்திய இராவணன் கதா நாயகனாக, வில்லேந்திய இராமன் வில்லனாகி விடுவான்.

வெம்மை மிகுந்த அம்பினால் மராமரங்களைத் துளையிடும் நிகழ்வினை வெளிப்படுத்தும் மராமரப் படலத்திலே இராமன் "வில்லி" என்று குறிப்பிடப்படுகின்றான்.

"வெய்ய வாளியை ஆளுடை வில்லியும் விட்டான்" என்று கம்பர் சிறப்பிக்கின்றார். அனைவரையும் ஆட்கொள்ளும் ஆற்றல் மிகுந்த வில்லேந்திய இராமபிரான் வெம்மைமிகுந்த அம்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தார் என்பதே அவ்வடியின் பொருளாகும். மேலும், மேரு மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானையும் கம்பர் "வட வரை வில்லி" என்றே சுட்டுகின்றார்.

"வில்லன்", "வில்லி" என்ற பதங்கள் தற்காலத்தில் மொழிக்கலப்பினால் மாறுபட்ட அர்த்தத்தினை தருகின்றன. இத்தகைய அபத்தத்தினை அகற்ற வேண்டுமாயின் "எதிர்நாயகன்" "எதிர்நாயகி" என்போரைச் சுட்டுவதற்கு பொருத்தமான மாற்றுப் பதங்களை உருவாக்கி வெகுமக்கள் தளத்திற்கு நகர்த்த வேண்டும். கலைச்சொற்கள் பாமரமக்களிடம் புழங்கும் வகையில் அமையின் மொழித் தூய்மை ஓரளவேனும் சாத்தியப்படும். இல்லையேல் தமிழின் மூலப்பதங்களை இனங்காணவே, மூச்சுத்திணறும் எதிர்கால சந்ததியொன்று உருவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓய்வெடுக்கச் சென்றாயா ஒன்றும் புரியவில்லை
காய்ச்சல் தலையிடி வந்தாலும் – தாயே நீ
நோய் மறைத்துச் சோறிடுவாய்! என்றகலும் உந்தனுக்கு
வாய்க்கரிசி போட்ட வலி?



அலைநீர்க் குமிழிபோல் அற்பான வாழ்வின்
நிலையாமை என்று தெளிவேன் – மழைநாளில்
தும்முவேன், நீயோ துடி துடிப்பாய்! தாயுனக்கா
செம்மணியில் தீ மூட்டினேன்?

நடமாடும் விக்கிரகம் நானிலம் வாழ் தெய்வம்
புடம் போட்ட தூய பொன்னம்மா – கடல்வானம்
காற்று நிலந்தீக்குக் காடாற்றிப் பங்கிடவா
ஈற்றிலே ஈன்றாய் எனை?




ஊனும் உயிரும் உணர்வும் கலந்துன்னால்
நான் முகிழ்த்தேன் செங்குருதிப் பால் தந்தாய் – வான் கடந்து
சிப்பியாய் நானாகி முத்துன்னைப் பெற்றெடுத்தல்
எப்பிறப்பில் வாய்க்கும் எனக்கு

மேதாவளி கம்பன் மேன்மை சிறுநூலாய்
பாதார விந்தம் சமர்ப்பித்தேன் – ஓதுவேன்
அன்னைத் தமிழ் மொழியில் ஆவி பிரியுமட்டும்
பொன்னம்மா உந்தன் புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org